இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 21-07-2025

# மது ஆலை திறப்பு - பள்ளிக்கு பூட்டு! இதுதான் பா.ஜ.க.வின் உ.பி. மாடல்!

இந்தியாவின் உதாரணப் புருஷராகச் சொல்லப்படுபவர் உத்தரப்பிரதேசத்தை ஆளும் யோகி ஆதித்யநாத். அவரிடம் இரண்டே இரண்டு வேட்டிதான் இருக்கிறதாம். ஒரு வேட்டியை கட்டி இருப்பார். இன்னொரு வேட்டியை துவைத்துக் காய வைத்திருப்பார். அந்த வேட்டி காயாததால், டெல்லி விமானத்தை கூட தவறவிட்டுவிட்டார். இப்படி ஒரு கப்சா கதை உண்டு. பா.ஜ.க.வின் வாட்ஸ் அப் பல்கலைக் கழக கப்சாகளில் இதுவும் ஒன்று.

**அத்தகைய உதாரணப் புருஷரான யோகி ஆதித்யநாத், இரண்டு செயல்களை கடந்த வாரம் செய்திருக்கிறார். ஒன்று 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிக் கூடங்களை மூடுவது என்று முடிவெடுத்து இருக்கிறார். இன்னொன்று ஜெகஜோதியாக மதுபான முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி இருக்கிறார்.**

மதுபான தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தும் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் நிதிநிலைமையைக் காரணமாகக் காட்டி 5 ஆயிரம் பள்ளிகளை மூட முடிவெடுத்துள்ள செய்தி வெளியாகி இருக்கிறது. **“கல்வி, படிப்பைப் பார்த்து பா.ஜ.க. அஞ்சுகிறது”** என்று கண்டித்துள்ளார் சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ். **“ஏழைக் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதி”** என்று சொல்லி இருக்கிறார் பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி. ஆனால் இதைப் பற்றி எல்லாம் யோகிக்கு கவலை இல்லை. அவர் மதுபான ஆலை அதிபர்களின் மாநாட்டை நடத்தி முடித்து விட்டார்.

**இந்திய நாட்டிலேயே முதன்முதலாக மதுபான தொழில் முதலீட்டாளர் மாநாட்டை நடத்திய பெருமை பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேசம் பெற்றுள்ளது.**

யோகி நடத்தி உள்ள மதுபான தொழில் முதலீட்டு மாநாட்டில் 200 நிறுவனங்கள் பங்கெடுத்தன. 15 நிறுவனங்கள் அரசுடன் ஒப்பந்தங்கள் போட்டுள்ளன. இதன் மூலமாக 4 ஆயிரத்து 320 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. கோரக்பூர், லக்னோ மற்றும் மதுரா உள்ளிட்ட 15 வெவ்வேறு மாவட்டங்களில் அவர்கள் தங்கள் அலகுகளைத் தொடங்குவார்கள்.

உத்தரப்பிரதேசத்தில் 2018-2019 நிதியாண்டில், மது விற்பனை மூலம் கிடைத்த வரி வருவாய் 23 ஆயிரத்து 927 கோடி ரூபாயாக இருந்தது. இது இப்போது 52 ஆயிரத்து 570 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது. மது விற்பனை மூலம் நாட்டிலேயே அதிக வரி வருவாய் ஈட்டும் உத்தரப் பிரதேசம், அதனை மேலும் அதிகரிக்கும் நோக்கில் இம்மாநாட்டை நடத்தியுள்ளது. 2018 ஆம் ஆண்டில், உத்தரப்பிரதேசம் 62.95 கோடி லிட்டர் மதுபானங்களை உற்பத்தி செய்து வந்தது. 2025 ஏப்ரல் மாதம் இந்த எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்து 182.6 கோடி லிட்டராக உயர்ந்தது.

**இந்தியாவில் இதுதான் அதிக எண்ணிக்கையிலான மாநில உற்பத்தி ஆகும். அந்த விருதையும் தரலாம்.**

உ.பி. கலால் துறை இணையமைச்சர் (தனிப் பொறுப்பு) நிதின் அகர்வால் சொல்வதைக் கேளுங்கள்.... **“முன்னதாக, மதுபான உற்பத்தியாளர்கள் (சாதாக்கள், ஜெய்ஸ்வால்கள்) உத்தர பிரதேசத்தில் மதுபான உற்பத்தியில் பெரிய ஜாம்பவான்களாகக் கருதப்பட்டனர், ஆனால் 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில் நாங்கள் கொள்கைகளை மாற்றியதால், சிறு வணிகர்களும் அதில் நுழைந்தனர்,”** என்று சொல்லி இருக்கிறார். அனைவரும் காய்ச்சலாம் என்று ஜனநாயகப் படுத்தி இருக்கிறார்களாம்!

உ.பி. அரசின் கலால் கொள்கையின் கீழ், நடப்பு நிதியாண்டில் 3,171 உள்நாட்டு மதுபானக் கடைகள் குறைக்கப்பட்டுள்ளன. அதேசமயம், 3,392 பியர் கடைகள் மற்றும் 2,799 வெளிநாட்டு மதுபானக் கடைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கிராமப் புறங்களில் 2,791 உள்நாட்டு மதுபானக் கடைகளில் பியர் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உ.பி. கலால் துறை மார்ச் 2022 இல் ஒரு சுதேசிக் கொள்கையை வகுத்துள்ளது. **‘உத்தரப் பிரதேசத்தில் தயாரிக்கப்பட்ட ஒயின்’** என்பதுதான் அந்தக் கொள்கை. உள்ளூர் பழங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பானங்களுக்கு கலால் வரி விதிக்கப்படுவதில்லையாம். ‘சுதேசி’ மதுபானத் திட்டம் இது.மாம்பழங்கள் மற்றும் உள்ளூரில் விளையும் பல்வேறு பழங்களிலிருந்து மதுபானங்களை உற்பத்தி செய்யும் உ.பி.யின் முதல் பழ ஒயின் ஆலை லக்னோவின் மாலிஹாபாத் பகுதியில் திறக்கப்பட்டு உள்ளது.

2020 ஆம் ஆண்டு ஜூலையில் உ.பி. அமைச்சரவை கூடி ஒரு முடிவு எடுத்தது. **ஷாப்பிங் மால்களில் உயர்தர மதுபானம் மற்றும் பீர் விற்பனை செய்யலாம்** என்பதே யோகியின் முடிவு. அரசுக்கு 12 லட்சம் ரூபாய் ஆண்டுக்கு கட்ட வேண்டும். இது மதுவை சாதாரணப் பொதுமக்களின் பார்வைக்கு விருந்தாக வைக்கப்பட்டது. ‘தி பிரிண்ட்’ இதழுக்கு உ.பி. அதிகாரி கொடுத்த பேட்டியில், **‘பெண்கள் அதிகமாக வாங்கிச் செல்கிறார்கள்’** என்று பெருமையாகச் சொல்லி இருக்கிறார்.

இந்திய சர்வதேச மதுபானங்கள் மற்றும் ஒயின்கள் சங்கம் உச்சிமாநாட்டில் வெளியிட்ட அறிக்கையில், “ **மாநிலத்தின் மதுபானத் தொழில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.4 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது. மாநிலத்தின் வரி வருவாயில் மதுபான விற்பனை 25 சதவீதமாகும். IMFL பிரிவும் ஆண்டுக்கு 10 சதவீத அளவு வளர்ச்சியைக் கண்டுள்ளது”** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பா.ஜ.க. மாடல் ஆட்சிக்கு கிடைத்த சான்றுகள் ஆகும்.

**எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மதுவுக்கு எதிராக குரல் எழுப்பும் பா.ஜ.க.,வினர், தாங்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் மட்டும் மதுபான தொழிற்சாலைக்கும், உற்பத்திக்கும், விற்பனைக்கும் தாராள அனுமதி வழங்கி வருகின்றனர் என்பது இதன் மூலமாக வெளிச்சமாகி இருக்கிறது. மதுபானம் தறிகெட்டு ஓடும் புதுச்சேரியின் ஆளுநராக இருந்து விரட்டப்பட்ட தமிழிசையும், ‘அண்ணா எனக்கு இப்ப எந்த வேலையும் இல்லைண்ணா’ என்று சொல்லும் அண்ணாமலையும் போய் மதுவுக்கு எதிராகப் போராட்டம் நடத்த வேண்டிய இடம் உத்தரப்பிரதேசம்தான்.**

●●

## திருமதி துர்கா ஸ்டாலினின்

# ‘அவரும் நானும்’ பாகம் - 2 நூல் வெளியீட்டு விழா!

## எழுத்தாளர் சிவசங்கரி இன்று வெளியிடுகிறார்! முதல் நூலை மல்லிகா சீனிவாசன் பெறுகிறார்!

**சென்னை, ஜூலை 21 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் துணைவியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களின் ‘அவரும் நானும்’ பாகம் - 2 நூல் வெளியீட்டு விழா உயிர்மை பதிப்பகம் சார்பில் இன்று (21-7-2025 - திங்கள்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை - கோட்டூர்புரம் - அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறுகிறது.**

இவ்விழாவில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., வரவேற்புரையாற்றுகிறார்.

கவிஞர் மனுஷ்ய புத்திரன், பதிப்பாளர் உரையாற்றுகிறார்.

பத்திரிகையாளர் திருமதி. லோகநாயகி, நூல் அறிமுக உரையாற்றுகிறார்.

இந்நூலை எழுத்தாளர் சிவசங்கரி வெளியிடுகிறார்.

முதல் நூலை டாபே குழுமம் நிர்வாக இயக்குநர் - தலைவர் மல்லிகா சீனிவாசன் பெறுகிறார்.

சிறப்புப் பிரதிகளை இன்பன் உதயநிதி, நலன் சபரீசன் ஆகியோர் பெறுகின்றனர்.

இவ்விழாவில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய மேல் முறையீட்டு ஆணையத் தலைவரும் - மேனாள் நீதியரசருமான திருமதி பவானி சுப்பராயன், கோவை சந்திரா - ஜி.ஆர்.ஜி. நிறுவனங்களின் தலைவர் முனைவர் நந்தினி ரங்கசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

விழாவில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் ஏற்புரையாற்றுகிறார்.

‘உயிர்மை’ இதழின் நிர்வாக ஆசிரியர் செல்வி ராமச்சந்திரன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில், மாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை கலைமாமணி ராஜேஷ் வைத்யாவின் வீணை இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

---

## 8 புதிய மசோதாக்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டம்!

# இன்று நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்குகிறது!

## ‘ஆபரேஷன் சிந்தூர்’ உள்ளிட்ட விவகாரங்களில் விளக்கம் கேட்க எதிர்க்கட்சிகள் முடிவு!

புதுடெல்லி, ஜூலை 21 -

பரபரப்பான அரசியல் சூழலில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது. இக்கூட்டத் தொடரில் பஹல்காம் தாக்குதல் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் இன்று தொடங்கி ஆகஸ்ட் 21ம் தேதி வரை நடைபெறுகிறது.

இக்கூட்டத் தொடரில், தேசிய விளையாட்டு நிர்வாக சட்ட மசோதா, புவியியல் பாரம்பரிய தலங்கள் மற்றும் புதைபடிமங்கள் சட்ட மசோதா, சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் சட்டத் திருத்த மசோதா, தேசிய ஊக்கமருந்து தடுப்பு சட்டத் திருத்த மசோதா உள்ளிட்ட 8 புதிய மசோதாக்களை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

மேலும், மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிப்பதற்கான நாடாளுமன்ற ஒப்புதலையும் ஒன்றிய அரசு கோரவுள்ளது. இதனிடையே, ஆபரேஷன் சிந்தூர், அகமதாபாத் விமான விபத்து, பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி உள்ளிட்டவிவகாரங்களில் ஒன்றிய அரசிடம் விளக்கம் கேட்க எதிர்க்கட்சிகள் தயாராகி வருகின்றன.

மேலும், இந்தியா-பாகிஸ்தான் இடையே சண்டை நிறுத்தம் ஏற்பட, தான் மத்தியஸ்தம் செய்ததாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து கூறிவருவது குறித்து ஒன்றிய அரசின் விளக்கத்தைக் கோரவும் எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

---

## நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் தொடங்கும் நிலையில்

# ஒன்றிய அரசு கூட்டிய அனைத்து கட்சிக் கூட்டம்!

## மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு – மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பங்கேற்பு!

புதுடெல்லி, ஜூலை 21 -

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவதற்காக ஒன்றிய அரசு அழைப்பு விடுத்த அனைத்து கட்சிக் கூட்டம் டெல்லியில் நேற்று நடைபெற்றது.





அமைச்சர்கள் கிரண் ரிஜிஜு, ஜெ.பி.நட்டா, அர்ஜுன் ராம் மேக்வால் ஆகியோர் இக்கூட்டத்தில் ஒன்றிய அரசின் சார்பில் கலந்து கொண்டனர்.

காங்கிரஸ் சார்பில், ஜெய்ராம் ரமேஷ், தி.மு.க. சார்பில் மக்களவை திமுக குழு தலைவர் டி.ஆர். பாலு, மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

சிவசேனா எம்.பி ஸ்ரீகாந்த் ஷிண்டே, என்.சி.பி. சார்பில் சுப்ரியா சுலே மற்றும் சமாஜ்வாதி. YSR காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகி கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

---

## வேலைவாய்ப்புத் திண்டாட்டத்தைப் போக்க நடவடிக்கை இல்லாததால்

# இளைஞர்கள் - பீகார் மாநிலத்தை விட்டு வெளியேறும் அவல நிலை!



## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

பாட்னா, ஜூலை 21 -

வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க பீகார் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததால், ஏராளமான இளைஞர்கள் மாநிலத்தை விட்டு வெளியேறும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டி உள்ளார்.

பாட்னாவில், இளைஞர் காங்கிரஸ் சார்பில் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். இது குறித்து சமூகவலைத்தளத்தில் பதிவிட் டுள்ள ராகுல் காந்தி, வேலை வாய்ப்பு முகாமில் திரண்ட கூட்டம், பீகார் இளைஞர்கள் வெற்று உரைகளை விரும்பவில்லை என்பதையும், அவர்களின் எதிர்காலத்திற்கான வேலைவாய்ப்புக்களை எதிர்பார்க்கிறார்கள் என்ற செய்தியை உணர்த்துவதாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். பா.ஜ..கவும் நிதிஷ் அரசும் பீகாரை வேலையின்மை என்ற நெருப்பில் தள்ளிவிட்டுள்ளதால், லட்சக்கணக்கான இளைஞர்கள் வாழ்வாதாரத்திற்காக தங்களின் குடும்பம், கிராமம் என அனைத்தையும் விட்டுவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் விமர்சித்துள்ளார். பீகார் இளைஞர்கள் கடின உழைப்பாளிகளாகவும் திறமையா னவர்களாகவும் உள்ளனர் என்றும், அவர்களுக்கு உள்ளூரில் மரியாதைக்குரிய வேலை வாய்ப்பு மட்டுமே தேவை என்றும் ராகுல் காந்தி சுட்டிக்காட்டி உள்ளார். காங்கிரசும் இந்தியா கூட்டணியும் வாக்குறுதிகள் அளிப்பதுடன் நிற்காமல், தீர்வுகளையும் கொண்டு வருவதால், தற்போது நிலைமை மாறத் தொடங்கி உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். திறன் மேம்பாட்டிற்கான உரிமைகள், ஒவ்வொரு இளைஞருக்கும் வேலைவாய்ப்பு, இடப்பெயர்வை நிறுத்துதல், ஒவ்வொரு குடும்பத்தையும் ஒன்றாக வைத்திருத்தல் என்ற தங்களின் நோக்கம் தெளிவாக உள்ளது என்றும் ராகுல் காந்தி பதிவிட்டுள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சொக்கதேவன்பட்டியில் மகளிர் விடியல் பேருந்து வழித்தடத்தை தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன் கொடி அசைத்து துவங்கி வைத்தார். உடன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் ஒன்றிய துணைச் செயலாளர் பாஸ்கர அய்யன், தேனி நகரச் செயலாளர் பாலமுருகன், பேரூராட்சி சேர்மன்கள் நாகராஜ், பால்பாண்டி மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.